بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 25, April 2014 (Tamil)**

## மார்க்கத் தொண்டர் மஹ்மூது அஹ்மது ஷாஹிது அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் மிகவும் அன்பிற்குரிய, தனது எல்லையற்ற நன்றியுணர்வுள்ளவராக இருந்ததன் காரணத்தினால் ஒரு சிறப்பான அந்தஸ்தைக் கொண்டவராக இருந்த, ஜமாஅத்திற்காக தன்னை தியாகம் செய்பவராக விளங்கிய ஒருவரைப் பற்றிக் கூறயிருக்கிறேன். அவர் இரண்டு நாட்களுக்கு முன் மரணித்து விட்டார்கள் - இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். ஒவ்வொரு மனிதனும் ஒரு நாள் இந்த உலகத்தை விட்டுச் செல்ல வேண்டும். ஆனால் இறைதிருப்திக் கேற்ப தனது வாழ்க்கையை நடத்த முயற்சி செய்பவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றனர்! அவர்கள் உடன்படிக்கை செய்யும்போது அதனை முடிந்த அளவுக்கு நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர். மார்க்க தொண்டு செய்வதுடன் மனித தொண்டு செய்வதிலும் எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். உலகம் போற்றும் மக்களில் ஒருவராக மாறி விடுகின்றனர். இதன் காரணமாகத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுக்கிணங்க அப்படிப்பட்ட மக்களின் மீது சுவர்க்கம் கடமையாகி விடுகிறது. ஜமாஅத்தின் அந்த தொண்டர் காலத்தின் கலீஃபாவிற்கு உதவி செய்யக்கூடியவராகவும், கிலாஃபத்திற்காக எல்லையற்ற தன்மான உணர்வு கொண்டவராகவும் விளங்கிய நமது சகோதரர் **ஜனாப் மஹ்மூது அஹ்மது ஷாஹிது** ஆவார்கள். இவரை மஹ்மூது பங்காலீ என்ற பெயரால் பாகிஸ்தானிலும் பலரும் அறிவார்கள். இப்போது இவர் ஆஸ்திரேலியாவின் அமீராக இருந்தார். அங்கேயே **23 ,ஏப்ரல் புதன் அன்று மரணமடைந்தார்** - இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அவருடைய மரணத்திற்குப் பிறகு எனக்கு ஒரு அன்பரின் முதல் கடிதம் வந்தது. அதில் அவர் கிலாஃபத்திற்கு எப்படிப்பட்ட அர்ப்பணம் செய்பவராக இவர் இருந்தார் என்றால், அல்லாஹ் நம்மையும் அப்படி ஆக்குவானாக என எழுதியிருந்தார். அவருக்கு நான் பதில் எழுதும்போது, இவர் நாடித்துடிப்பைப் போன்று செயல்பட்டார்; இந்த கட்டளை ஏன் வந்தது? எவ்வாறு, எப்படி வந்தது? என அவரது உள்ளத்தில் ஒருபோதும் சிந்தனை எழுந்ததில்லை. தனது விருப்பத்திற்கு மாற்றமான ஒரு கட்டளை வந்தாலும் அவர் உடனே அதனை நிறைவேற்றி வந்தார். அவருடைய நோய் மற்றும் மரணம் பற்றிய சில விபரங்களை நான் கூறுகிறேன்.

ஏப்ரல் 22-ஆம் தேதி சிட்னியிலுள்ள கொள்கை பரப்பு நிலையத்தை நோக்கி அஸ்ர் தொழுகைக்காக அவர் வெளியேறியபோது உடல் நலமில்லாததால் வீடு திரும்பினார். கடுமையான **Brain Haemorrhage** - ன் தாக்குதல் ஏற்பட்டது. ஏற்கனவே நீரிழிவு நோயும் இரத்தக் கொதிப்பு நோயும் இருந்தது. அவர் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் வென்டிலேட்டரில் வைக்கப்பட்டார். மூளையில் எந்த இடத்தில் தாக்குதல் ஏற்பட்டுள்ளதோ அங்கிருந்து வாழ்க்கை திரும்புவது சாத்தியமில்லை என்பதே மருத்துவர்களின் கருத்தாக இருந்தது. ஆயினும் நான், 24 மணி நேரம் முயற்சி செய்யுங்கள்; அதை விட அதிகமாக வேண்டாம் எனக் கூறினேன். 24 மணி நேரத்திற்குப் பிறகு அந்த கருவி நீக்கப்பட்ட பிறகு 2 நிமிடங்களுக்குள்ளேயே அவர் அல்லாஹ்விடம் ஆஜராகி விட்டார். மவ்லவி சாஹிபைப் பற்றிய

அறிமுகம் என்னவென்றால், இவர் 18 நவம்பர் 1948 அன்று வங்காளதேசத்திலுள்ள சாந்பூர் மாவட்டத்தில் சார்துக்யா (**Char Dukhiya)** என்ற ஊரில் பிறந்தார். இவருடைய தந்த பெயர் மவ்லானா அபுல் கைர் முஹம்மது முஹிப்புல்லாஹ் என்பதாகும்; தாயார் பெயர் ஸைபுந் நிஸா என்பதாகும். இவருடைய தந்தை அபுல் கைர் முஹம்மது முஹிபுல்லாஹ் சாஹிப் 1943-ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். ஆரம்பத்தில் அபுல் கைர் முஹம்மது என்பது அவரது பெயராக இருந்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முஹிப்புல்லாஹ் (அல்லாஹ்வை நேசிப்பவர்) என்பதை அதிகப்படுத்தினார்கள். (மர்ஹூம் மஹ்மூது அஹ்மது ஷாஹிது அவர்களின் தந்தையாகிய) இவர் தமது ஊரில் முதல் அஹ்மதி ஆவார். மிகப் பெரிய மார்க்க அறிஞராக இருந்தார். இவருக்கு தப்லீகிலும் அதிக ஆர்வம் இருந்தது. இவர் தமது தப்லீகின் மூலமாக தமது தந்தை காஜா அப்துல் மன்னான் சாஹிப் (அதாவது மர்ஹூம் மஹ்மூது அஹ்மது ஷாஹிது அவர்களின் பாட்டனார்) அவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் ஒளியை வழங்கினார். இவர் அந்தக் காலத்தில் உத்தரப்பிரதேசத்திலுள்ள சஹாரன்பூரில் படிப்பதற்காகச் சென்றிருந்தார். அங்கு அவருக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி தெரிய வந்தது. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையில் நடந்த விஷயமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தில்லி சென்றிருந்தபோது மர்ஹூமின் பாட்டனாருக்கும் ஹுஸூர் (அலை) அவர்களை சந்திக்கும் ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் அவர் எங்கு கல்வி கற்று வந்தாரோ அவர்கள் அவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திக்க அனுமதி அளிக்கவில்லை. இவர் அஹ்மதியான பிறகு மக்கள் நம்மை இந்த அருளிலிருந்து விலக்கி வைக்க முயற்சி செய்தனர்; ஆனால் அல்லாஹ் நமக்கு இந்த அருளை வழங்கி விட்டான் என பிற்காலத்தில் கூறி வந்தார்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தூண்டுதலினால் ஜனாப் மஹ்மூது அஹ்மது சாஹிபின் தந்தை அவரை 1954- ல் வக்ஃப் செய்தார்கள். மஹ்மூது ஷாஹிது சாஹிப் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை தனது நாட்டிலேயே பெற்றார்கள். பிறகு 1962- ல் சிறுவராக இருக்கும்போதே ஜாமிஆவில் சேர்ந்தார். 1974- ல் இவர் **ஷாஹிது** பட்டம் பெற்றார்கள். இவரது திருமணம் 1977- ல் வங்காளதேசத்தின் அமீராகிய மவ்லவி முஹம்மது சாஹிப் அவர்களின் மகள் ஹாஜிரா சாஹிபாவுடன் நடந்தது. இவருக்கு 3 மகள்களும் 1 மகனும் இருக்கின்றனர். அல்லாஹ்வின் அருளால் அனைவரும் திருமணமானவர்கள். மேலும் ஜமாஅத்தின் தொண்டுகளில் முன்னணியில் இருக்கின்றனர்.

மஹ்மூது சாஹிப் அவர்கள் தமது ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றிய சில குறிப்புகளை தமது மருமகனிடம் கூறினார். அதில் கூறியிருப்பதாவது, கல்வி பயின்று கொண்டிருக்கும்போது ஒருமுறை கால்பந்து விளையாடிக்கொண்டிருக்கும்போது அவரது முழங்காலில் கடுமையான காயம் ஏற்பட்டது. கடுமையாக நோயுற்றார். அதனால் வங்காளதேசத்திற்கு திரும்பி விட்டார். அப்போது ரப்வாவின் காலச் சூழ்நிலையும் மிக மோசமானதாக இருந்தது. உப்பு தண்ணீர்தான் இருந்தது. நல்ல தண்ணீர் கிடைக்காதிருந்தது. அதனால் இவருக்கு அதிகமாக வயிற்றுவலி இருந்து வந்தது. பெற்றோரும் வெகு தொலைவில் இருந்தனர். இவர் சிறுவராக இருந்தார். கடைசியில் இவருக்கு பெற்றோரின் நினைவும் வந்தது. காலில் அடிபட்டும் இருந்ததால் அவர் வங்காளதேசம் திரும்பினார். ரப்வா திரும்பி வர வேண்டும் என்ற ஆசை இருக்கவில்லை. ஆனால் அந்த காலத்தில் ரப்வாவின் தலைமைப் பேராசிரியராக இருந்த சய்யிது மீர் தாவூது அஹ்மது சாஹிப் இவரை மீண்டும் ஜாமிஆவுக்கு திரும்பி வருமாறு மீண்டும் மீண்டும் கடிதம் எழுதி முயற்சி செய்தார். இதன் காரணமாக அவர் திரும்பினார். தமது தந்தையின் துஆக்களினாலும் தன் வாழ்க்கையில் மிகப் பெரும் தாக்கம் ஏற்பட்டது என இவர் கூறுகிறார். அவர் கூறுவதாவது, ரப்வாவில் படித்துக் கொண்டிருக்கும்போது ரப்வாவின் காலச் சூழ்நிலை மிக மோசமாக இருக்கிறது; தண்ணீர் இல்லை; அதிக வெப்பமாக இருக்கிறது; உண்பதற்கும் குடிப்பதற்கும் கடினமாக இருக்கிறது என்றெல்லாம் அவர் தன் தந்தைக்கு எழுதியிருந்தார். இதற்கு பதில் எழுதும்போது அவருடைய தந்தையாகிய ஜனாப் முஹிப்புல்லாஹ் சாஹிப், மக்காவிலும் மிகவும் கடினமான நிலைமையாகத்தான் இருந்தது. இறைவா! எந்த புற்பூண்டும் இல்லாத ஒரு பள்ளத்தாக்கில் நான் என் குடும்பத்தை வாழ விட்டு வந்துள்ளேன் என்று இப்ராஹீம் (அலை) அவர்கள் கூறிய வசனத்தைக் குறிப்பிட்டார்கள். (திருக்குர்ஆன் 14:38) இதனை சான்றாகக் கொண்டு அல்லாஹ்வின் கலீஃபா எந்த நகரத்தில் குடிபெயர்ந்தார்களோ அங்கு உன்னால் இருக்க முடியாது என்றால் தந்தையுடன் கொண்டிருக்கும் உறவுக்கு எந்த அர்த்தமுமில்லை என அறிவுறுத்தி

எழுதினார்கள். இதற்குப் பிறகு எனது வாழ்க்கையில் மிக ஆழமான மாற்றம் ஏற்பட்டது என்று அவரே கூறுகிறார்.

ஆஸ்திரேலியாவில் தற்போது இவரது பொறுப்பு அமீராக இருக்கின்ற காலிது சய்ஃபுல்லாஹ் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை மஹ்மூது பங்காலி சாஹிப் தம்மிடம் கூறியதாவது, 1979- ல் அனைத்துலக குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர் தேர்தல் நடந்தபோது இவர் வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 5-ஆவது இடத்தில் இருந்தார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இவருடன் மிகவும் பரிவு காட்டினார்கள். ஹுஸூர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இவரை அழைத்து, இன்று மாலை வரை அதிகமாக இஸ்திக்ஃபார் (பாவ மன்னிப்பு) தேடிக்கொண்டிருங்கள் எனக் கூறினார்கள். என்னிடம் என்ன தவறு ஏற்பட்டு விட்டதோ தெரியவில்லையே! என நினைத்து நான் பயந்தேன். நான் 5- ஆவது இடத்தில் இருந்தாலும் என்னை ஹுஸூர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக நியமித்தபோதுதான், ஹுஸூர் அவர்கள் இந்த வகையில் எனக்கு பணிவின் பக்கம் கவனமூட்டி இருந்திருக்கிறார்கள் என்பது புரிந்தது.

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) கூறுகிறார்கள்: இது தேர்ந்தெடுக்கப்படுகின்ற எல்லா பொறுப்பாளர்களுக்கும் படிப்பினையாகும். தேர்ந்தெடுத்த பிறகு இஸ்திக்ஃபார் மற்றும் சலவாத் ஆகியவற்றை மிக அதிகமாக ஓத வேண்டிய தேவை இருக்கிறது. அப்போதுதான் பணிவு எப்போதும் நிலைத்திருக்கும். மேலும் தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் சரியான முறையில் வழங்கிக் கொண்டே இருப்பான்.

அந்த காலத்தில் (குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு) முழு உலகிற்கும் ஒரு தலைவர் என்றிருந்தார். மற்றவர்கள் உலக தலைவராக இருக்கவில்லை. மாறாக அவர்கள் காயிதுகள் என அழைக்கப்பட்டனர். இவருடைய காலத்தில் (குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கென்று) முழு உலகத்திற்கும் ஒரு தலைவர் என்ற இந்த நடைமுறை முடிவுக்கு வந்தது. இவர்தான் (குத்தாமுல் அஹ்மதிய்யாவின்) பன்னாட்டுத் தலைவர் என்பதில் கடைசியானவராக இருந்தார். இந்த காலம் முடிந்தபோது இவர் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு மிகவும் பணிவான ஒரு கடிதம் எழுதினார். அதற்கு பதில் எழுதும்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள், 'நீங்கள் கடிதத்தில் தேவையில்லாமல் வெட்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். வெட்கப்பட வேண்டிய தேவை என்ன? நீங்கள் உங்கள் காலத்தில் நல்ல முறையில் தொண்டு செய்கிறீர்கள்- மாஷா அல்லாஹ். பெரும் கடினமான நிலைமைகளிலும் மிக அழகாகவும், ஞானத்துடனும், தைரியத்துடனும் வேலை செய்திருக்கிறீர்கள். அல்லாஹ் அருள் புரிவானாக. இதனால்தானே நீங்கள் அன்ஸாருல்லாஹ் சென்ற பிறகும் கூட உங்களுக்கு தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

(இவருக்கு ஓராண்டு பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டிருந்தது - ஹுஸூர்)

நீங்கள் தகுதியானவராக இல்லாதிருந்தால் அப்படி ஒருபோதும் வழங்கப்பட்டிருக்க மாட்டாது. அல்லாஹ் இனிமேலும் உங்களுக்கு எப்போதும் ஜமாஅத்திற்காக தன்னலமற்ற தொண்டராக இருக்கச் செய்வானாக. மிகச் சிறந்த தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பை பெற்றுக் கொண்டே செல்வீர்களாக' எனக் குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள்.

காலிது சய்ஃபுல்லாஹ் சாஹிப் எழுதுகிறார்கள்: மர்ஹூம் மஹ்மூது சாஹிப் கூறியது என்னவென்றால், நான் படிப்பதற்காக ரப்வா வந்தபோது என்னுடன் இன்னும் சில மாணவர்கள் இருந்தனர். நாங்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களை சந்திக்கச் சென்றோம். ஹுஸூர் (ரலி) அவர்கள் கட்டிலில் அமர்ந்திருந்தார்கள். நாங்கள் அருகிலேயே அமர்ந்திருந்தோம். ஹுஸூர் (ரலி) அவர்கள் எங்களுக்கு வக்ஃப் மற்றும் தியாகத்தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் தமது ஒரு கையை என் மீது வைத்திருந்தார்கள். ஏனெனில் நான் அனைவரையும் விட ஹுஸூர் (ரலி) அவர்களுக்கு அருகில் இருந்தேன். அல்லாஹ்வின் ஹிக்மத் என்றே கூற வேண்டும். வெளியிலிருந்து வந்திருந்த மற்றெல்லா மாணவர்களும் ரப்வாவின் சுற்றுப்புறச் சூழ்நிலை, உணவு ஆகியவற்றின் கடினத்தை தாங்க முடியவில்லை. நான் மட்டும்தான் அல்லாஹ்வின் அருளினால் எனது கல்வியையும், வக்ஃபையும் நிறைவேற்றினேன். அது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கையை தொட்டதனால் ஏற்பட்ட அருளாகும்.

பிறகு காலிது சய்ஃபுல்லாஹ் எழுதுகிறார்கள்: மர்ஹூம் அமீர் சாஹிப் ஓர் அறிவுள்ள மனிதராக இருந்தார்கள். தொடர்பை ஏற்படுத்தும் திறமையையும் அதை நிறைவேற்றுவதையும் நன்கு அறிந்திருந்தார்கள். மேலும் அதை ஜமாஅத்தின் பயனுக்காக உபயோகப்படுத்தி வந்தார்கள். அதன் விளைவாக பாகிஸ்தான் அஹ்மதிகளுக்கு வெளிநாடு செல்வது எளிதாகி விட்டது. இவர் ஆஸ்திரேலியா வரும்போது சில நூறு அஹ்மதிகள்தான் இருந்தார்கள்; இப்போது ஆயிரக்கணக்கில் ஆகிவிட்டது. மேலும் இந்த முன்னேற்றம் தற்போதும் தொடர்கிறது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலின்படி, **அஹ்மதிகள் ஆஸ்திரேலியாவின் எல்லா நகரங்களிலும் குடிபெயர வைக்கப்பட்டனர்.** இப்போது எல்லா மாநில தலைநகரத்திலும் உறுதியான ஜமாஅத் நிலைபெற்றுள்ளது. மேலும் பரந்த அழகிய பள்ளிவாயில்களும் கொள்கை பரப்பு நிலையங்களும் நிலைபெற்றுள்ளன. சிட்னியிலும் பைத்துல் மஹ்தி பள்ளிவாயில் மட்டுமின்றி கிலாஃபத் நூற்றாண்டு ஹால் மற்றும் கொள்கை பரப்பு நிலையம் உள்ளன. விருந்தினர் இல்லம் தற்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறே **Brisbane** (ப்ரிஸ்பேன்)லும் பள்ளிவாயில் கட்டப்பட்டுள்ளது. **Melbourne (**மெல்பர்ன்)லும் பள்ளிவாயில் கட்டப்பட்டுள்ளது. **Adelaide** (அடலைட்) லும் ஜமாஅத்தின் மையம் உள்ளது. கேன்பராவில் பள்ளிவாயிலுக்காக நிலம் வாங்க முயற்சி நடந்து கொண்டிருந்து. சீக்கிரம் கிடைத்துவிடும். மர்ஹூம் மஹ்மூது சாஹிப் ஆஸ்திரேலியாவின் முன்னேற்றத்தில் நன்கு பங்கு பெற்றிருந்தார் - மாஷா அல்லாஹ்.

ஆஸ்திரேலியாவின் தேசிய தப்லீக் செயலர் இம்ரான் அஹ்ஸன் சாஹிப் கூறுகிறார்கள்: அமீர் சாஹிப் 1991- லிருந்து ஆஸ்திரேலியாவின் பொறுப்பு கொள்கை பரப்புநராகவும் ஜமாஅத் அமீராகவும் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். ஜமாஅத் தற்போதும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் அவர்களின் காலகட்டத்தில் மிகப் பெரிய கட்டடப் பணிகள் முழுமையடைந்தன.

பிறகு விக்டோரியாவிலுள்ள ஜமாஅத்தின் தலைவர் ஜாவீது சாஹிப் தமது விரிவான கடிதத்தில் எழுதுகின்றார்: அமீர் சாஹிப் அவர்களின் விஷயங்களைப் புரிந்து கொள்ளும் திறன், சின்னச் சின்ன விஷயங்களில் வழிகாட்டுதல், சிந்தித்தல், அகப் பார்வை, தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றைக் கொண்ட சம்பவங்கள் எல்லாரின் நாவிலும் பொதுவானதாகும். அமீர் சாஹிப் அவர்களிடம் பழைய பைக் இருந்தது. மஜ்லிஸே ஆமிலா மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியும், நான் வேண்டிக் கொண்டபோதும் அவர் நல்ல பைக்கை வாங்கவில்லை. மேலும் கொள்கை பரப்புநர்களுக்கு நல்ல பைக்கை வாங்கிக் கொடுத்து வந்தார்கள். தன்னைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதில்லை. அவ்வாறே அவரது மகள் எழுதுகிறார்: நாங்கள் ஆடைகளை வாங்கி வந்தோம். அவர்கள் ஆடைகளுக்காக அதிகம் செலவு செய்ததில்லை. ஜமாஅத்திற்காக செலவு செய்வதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட்டார்கள். அவரின் நினைவாற்றல் மிக நன்றாக இருந்தது. ஜமாஅத்தின் சகோதரர்களை அவர்களின் பெயரைக் கொண்டு நினைவுகூர்ந்து வந்தார்கள். மேலும் அவர்களின் சிறப்புகளை பயன்பாட்டில் கொண்டு வருவதற்கான இறைவனால் வழங்கப்பட்ட திறனைப் பெற்றிருந்தார்கள்.

தாஹிரா அத்ஹர் சாஹிபா அவர்கள் எழுதுகிறார்கள்: சில நாட்களுக்கு முன் ஆஸ்திரேலியாவின் ஆண்டு மாநாடு முடிவுற்றது. பள்ளிவாயிலில் தங்கியிருந்த விருந்தினர்களின் விருந்தோம்பல் பற்றி, அவர்களை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள் என குறிப்பாக வலியுறுத்தி வந்தார்கள். தொழுகைகளை பேணுவது பற்றியும் அதிகமாக வலியுறுத்தி வந்தார்கள்.

நமது அச்சக பொறுப்பாளரான ஆபிது வஹீது சாஹிப் கூறுகிறார்கள்: கடந்த ஆஸ்திரேலியாவின் சுற்றுப் பயணத்தின்போது மர்ஹூம் மஹ்மூது பங்காளி சாஹிப் அவர்களை அருகிலிருந்து பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. சுற்றுப் பயணத்தின் காலத்தில் அவருடைய உடல்நலம் சரியில்லாமல் இருந்தாலும் அவர் சின்னச் சின்ன விஷயத்தையும் கவனத்தில் கொண்டார்கள். உதாரணமாக, ஒருமுறை இரவு சாப்பாட்டில் மறுநாளும் ஒரே குழம்பு சமைக்கப்பட்டிருந்தது. அது பற்றி நாங்கள் உணரவில்லை. ஆனால் பங்காளி சாஹிப் அவர்கள் அதனை கவனத்தில் கொண்டார்கள். நோயுற்றிருந்தும் உணவுவறைக்குச் சென்று இங்கு வேறு எந்த குழம்பும் தென்படவில்லையே! ஒரே குழம்பு தரப்படுகிறது எனக் கேட்டார்கள். இவ்வாறு எல்லா விருந்தினர்களை கவனித்து வந்தார்கள். அது மட்டுமின்றி அவர்களிடம் பணிவு மிக அதிகமாக காணப்பட்டது. தமக்கு அறிவு, அநுபவம் ஆகியவை இருந்தாலும் தொலைதொடர்பு

விஷயங்கள் தொடர்பாக என்னிடம் (அதாவது ஆபிது வஹீது சாஹிபிடம்) ஆலோசனை கேட்பதில் வெட்கப்பட்டதில்லை. ஜமாஅத்தின் அமைப்புக்கு கண்ணியமளித்து வந்தார்கள். மேலும் கிலாஃபத்துடன் அளவு கடந்த நேசம் கொண்டிருந்தார்கள்.

இலண்டன் இமாம் ஜனாப் அதாவுல் முஜீப் ராஷிது அவர்கள் எழுதுகிறார்கள்: மிகவும் தூய மனதைக் கொண்டவராகவும், மார்க்கப் பற்றுள்ளவராகவும், பணிவுள்ளவராகவும், காட்டும் பண்பு அற்றவராகவும் இருந்தார். நான் 2004-ல் ஆஸ்திரேலியா செல்லும் வாய்ப்பு கிடைத்தபோது எனக்கு அவருடைய எண்ணற்ற சிறப்புகளைப் பற்றி தெரிய நேர்ந்தது. முதன்மையாக அவரிடம் கிலாஃபத்துடன் அன்பும் கட்டுப்படும் தன்மையும் இருந்தது. காலையில் நடக்கச் செல்லும்போது பெரும்பாலும் ஜமாஅத்தின் முன்னேற்றம், ஜமாஅத் பணிகளில் ஈடுபடுதல், அத்துடன் தொடர்பு கொண்டிருத்தல் ஆகியவை பற்றிய பேச்சுக்களே இருந்தன. மேலும் இன்னும் பல பலவீனங்கள் இருக்கின்றன. மக்களுக்கு என்னென்ன விஷயங்களின் பக்கம் கவனமூட்ட வேண்டிய தேவை இருக்கிறது என்பதைப் பற்றி ஒவ்வொரு ஜமாஅத்தையும் சான்றாகக் கொண்டு கூறி வந்தார்கள்.

இவர்களது ஜமாஅத் பணிகளைப் பற்றிக் கூறுவதென்றால், இவர்கள் **நாஸிர் ஹாஸ்டலின் ஸயீமாக (பொறுப்பாளராக)** இருந்திருக்கிறார்கள். பிறகு 1977 முதல் 79 வரை **ரப்வா மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முஹ்தமிம் மகாமீ (உள்ளூர் அமைப்பாளர்)** ஆக இருந்திருக்கிறார்கள். பிறகு 1977- ஆம் ஆண்டின் ஆண்டு இஜ்திமாவின்போது **ஐசத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா மர்கஸிய்யா (தலைமையக இளைஞர் அணி தலைவர்)** எனும் உயர்ந்த பதவி கிடைத்தது. 1979-80 லிருந்து 1988- 89 வரை 10 ஆண்டுகள் சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்தார்கள். நான் முன்னரே கூறியதைப் போன்று, உலக அளவிலான குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கடைசி தலைவர் இவர்தான். இதற்குப் பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யா நாடு தழுவிய அளவில் இல்லாமல் தனித்தனியாக மாறியது. இவர் **இஸ்லாஹ்- வ- இர்ஷாது துறையிலும்** தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பைப் பெற்றார். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் காலத்தில் தலைமையக ஸம்யீ பஸ்ரீ (ஒலிபரப்பு, ஒளிபரப்பு) துறை ஆரம்பிக்கப்பட்டபோது 1983 நவம்பரில் அதனை கண்காணிக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 28, ஜூன் 1991-லிருந்து உயிருள்ள வரை ஆஸ்திரேலியாவின் அமீராக தொண்டு செய்யும் நல்வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.அல்லாஹ் இவர் மீது அதிகமாக கருணை புரிவானாக. இவருடைய அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. நிச்சயமாக இவர் தன்னலமற்ற தொண்டு செய்பவராகவும் தனது எல்லா தகுதிகளையுடனும் ஜமாஅத்திற்காக தொண்டு செய்யும் சான்றோராகவும் விளங்கினார். தனது உடன் நலத்தை பொருட்படுத்தியதில்லை. எந்த தடையையும் ஜமாஅத்தின்பணியில் குறுக்கிட விரும்பியதில்லை. எனது சென்ற ஆஸ்திரேலிய சுற்றுப் பயணத்தின்போது இவர் மிகவும் துன்பத்தில் இருந்தபோதும் எல்லா பணிகளையும் கண்காணித்து வந்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: நான் குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் இவரின் கீழ் வேலை செய்திருக்கிறேன். மிகவும் திறந்த கையுடன் தன் கீழ் பணியாற்றுபவர்களிடமிருந்து வேலை வாங்கினார்கள். வேலை செய்வதற்கான வாய்ப்பை வழங்கினார்கள். பிறகு அதற்கு மதிப்பளிக்கவும் செய்தார்கள். கிலாஃபத்துக்கும் மிகவும் **சுல்தானுன் நஸீர்** (சாட்சியாளர், உதவியாளர்) ஆக திகழ்ந்தார்கள். அது போன்ற உதாரணங்கள் மிக அரிதாகக் கிடைக்கின்றன. இவர்கள் காலம் சென்று விட்டதால் ஆஸ்திரேலியா ஜமாஅத்தில் ஒரு வெற்றிடம் உருவாகியிருக்கிறது. ஆயினும் இறை ஜமாஅத்துகளை அல்லாஹ்வே காப்பாற்றுகிறான். மேலும் அந்த வெற்றிடங்களை நிரப்புகின்றான். அல்லாஹ் அருள் புரிவானாக. கிலாஃபத்திற்கு நன்றியுள்ளவர்களாகவும் உயிரை தியாகம் செய்பவர்களாகவும் தனது வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்கும் இவரைப் போன்ற **சுல்தானுன் நஸீரை** அல்லாஹ் எப்போதும் வழங்கிக் கொண்டே செல்வானாக. அல்லாஹ் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாவலனாகவும், உதவியாலனாகவும் இருப்பானாக. அவர்களும் தமது தந்தையைப் போன்று ஈமானில் உறுதியுள்ளவர்களாக இருக்கட்டுமாக. மேலும் கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு கொண்டிருப்பவர்களாக இருக்கட்டுமாக. ஜுமுஆ தொழுகைக்குப் பின் நான் அவருடைய ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன்.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***